தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

# திருக்குறள் திறன் போட்டி - 2022



**நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்**



## உள்ளடக்கம்


1. **தி.போ-22-01** போட்டி தொடர்பான நெறிமுறைகள்
2. **தி.போ-22-02** போட்டி நடைமுறைகள்
3. **தி.போ-22-03** தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர் விபரப் படிவம்
4. **தி.போ-22-04** தமிழ்ச்சோலை மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்குத் திணைக்களமட்டப் போட்டி, இறுதிப்போட்டி நடைமுறைகளை (**தி.போ-22-02**) வழங்கியமையை உறுதிப்படுத்தும் படிவம்.
5. போட்டிக்குரிய திருக்குறள்கள்

**அ.** அதிபாலர் பிரிவு

**ஆ.** பாலர் பிரிவு

**இ.** கீழ்ப்பிரிவு

**ஈ.** நடுவண்பிரிவு – அ

**உ.** நடுவண்பிரிவு – ஆ

**ஊ.** மேற்பிரிவு – அ

**எ.** மேற்பிரிவு – ஆ

**ஏ.** உயர்பிரிவு

**ஐ.** அதி உயர்பிரிவு


15-02-2022

## போட்டி தொடர்பான நெறிமுறைகள்

**திருக்குறள் திறன் போட்டிகள் பத்தாவது ஆண்டில் நுழைவதால் அவற்றின் திறனை மேம்படுத்தும் பொருட்டு நெறிமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதனைக் கருத்திற் கொள்ளவும்.**

1. தமிழ்ச்சோலைகளில் **தமிழ்மொழி கற்பவர்கள் மட்டுமே** போட்டியில் பங்குபற்ற முடியும்.

2. போட்டிக்கான பிரிவுகளும் போட்டியாளர் அகவை எல்லைகளும்.

| | | | |
|---|---|---|---|
| அ. | **அதிபாலர் பிரிவு** | : | 31-08-2016 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆ. | பாலர்பிரிவு | : | 01-09-2014 முதல் 31.08.2016 வரை பிறந்தோர் |
| இ. | **கீழ்ப்பிரிவு** | : | 01-09-2012 முதல் 31.08.2014 வரை பிறந்தோர் |
| ஈ. | நடுவண் பிரிவு-அ | : | 01-09-2010 முதல் 31.08.2012 வரை பிறந்தோர் |
| உ. | **நடுவண் பிரிவு-ஆ** | : | 01-09-2008 முதல் 31.08.2010 வரை பிறந்தோர் |
| ஊ. | மேற்பிரிவு - அ | : | 01-09-2006 முதல் 31.08.2008 வரை பிறந்தோர் |
| எ. | **மேற்பிரிவு - ஆ** | : | 01-09-2004 முதல் 31.08.2006 வரை பிறந்தோர் |
| ஏ. | உயர்பிரிவு | : | 01-09-2002 முதல் 31.08.2004 வரை பிறந்தோர் |
| ஐ. | **அதிஉயர்பிரிவு** | : | 01.09.2002 இற்கு முன் பிறந்தோர் |

3. திருக்குறள் திறன் போட்டி மூன்று கட்டங்களாக நடைபெறும்.

**அ.** தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டம்

**ஆ.** திணைக்கள மட்டம்

**இ.** இறுதிப்போட்டி

4. தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்திலான போட்டி **30.06..2022 இற்கு முன்பு** நடாத்தப்பட வேண்டும். போட்டி நடைபெறும் நாளினைப் பள்ளி நிர்வாகமே தெரிவுசெய்ய வேண்டும்.

5. தமிச்சோலைப் பள்ளி மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கு அந்தந்தத் தமிழ்ச்சோலை நிர்வாகமே வேறு தமிழ்ச்சோலைகளின் ஆசிரியர்களை நடுவர்களாகக் கடமையாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு நடுவர்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் இருப்பின் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்தின் உதவியை நாடலாம். ஆனால், எக் கரணியம் கொண்டும் அதே தமிழ்ச்சோலையில் கற்பிக்கும் ஆசிரியரை நடுவராக பணியாற்ற இசைவளிக்கக் கூடாது.

தொடர்ச்சி ....

**6.** தமிழ்சோலைப் பள்ளி மட்டத்திலான போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடம் பெறும் வெற்றியாளர்கள் திணைக்களமட்டப் போட்டிக்குத் தகுதி பெறுவர். இவர்களின் விளத்தங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பி, **10.07.2022 இற்கு முன்** தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

**7.** தவிர்க்க முடியாத கரணியத்தால் முதலாம் இடம் பெற்றவரால் திணைக்களமட்டப் போட்டியில் பங்குபற்ற முடியாது போயின், இரண்டாம் இடம் பெற்றவர் திணைக்களமட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும். இது தொடர்பான விளத்தங்கள் நிர்வாகியால் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகத்திற்கு **20.09.2022 இற்கு முன்பு** எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**8.** தமிழ்ச்சோலைப் பள்ளி மட்டத்தில் நடைபெறும் போட்டியின் போது ஒவ்வொரு பிரிவிலும் **முதல் மூன்று இடங்களினைப் பெறும் மாணவர்கள்** அந்தந்தத் தமிழ்ச்சோலைப் பள்ளிகளில் மதிப்பளிக்கப்படல் வேண்டும்.

**9.** திணைக்களமட்டத்திலான போட்டிகள் **02.10.2022** இல் நடைபெறும். போட்டி நடைபெறும் இடம், நேரம் தொடர்பான விளத்தங்கள் பின்னர் அறிவிக்கப்படும். திணைக்களமட்டப் போட்டி பின்வரும் அடிப்படையில் எட்டுப் பிரிவுகளாக நடைபெறும்.

- திணைக்களம் - 75
- திணைக்களம் - 77
- திணைக்களம் - 78 - 91 - 92
- திணைக்களம் - 93 (அ)
- திணைக்களம் - 93 (ஆ)
- திணைக்களம் - 94
- திணைக்களம் - 95
- வெளிமாவட்டங்கள்

**10.** திணைக்கள மட்டத்திலான போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் **முதலாம் இடம்பெறும் வெற்றியாளர்கள்** இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவர். **(திணைக்களமட்டப் போட்டியின் போது மட்டும் பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.)**

**11.** இறுதிப் போட்டி **23.10.2022 இல்** நடைபெறும். போட்டி நடைபெறும் இடம், நேரம் தொடர்பான விளத்தங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**12.** இறுதிப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களும், சான்றிதழ்களும், இறுதிப்போட்டியில் பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களுக்குமான பதக்கங்களும், சான்றிதழ்களும் 17.12.2022 **அன்று நடைபெறும் தமிழ்ச்சோலை முத்தமிழ் விழாவில்** வழங்கப்படும்.



## தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டப் போட்டி நடைமுறைகள்

தமிழ்ச்சோலைப் பள்ளிமட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் அனைத்துப் பிரிவுகளின் போட்டியாளர்களும், தமது பிரிவுக்குரிய அனைத்துக் குறள்களையும் மனனஞ்செய்து, ஒப்புவித்தல் வேண்டும். இதன்போது அவர்களது

- **மனனம்**
- **ஒலிப்பு**
- **பலுக்கல்**
- **உணர்வு**
- **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

அதிகாரம், அதிகார எண் என்பனவற்றைக் குறிப்பிடும் மாணவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
**(அதிபாலர் பிரிவு, பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு மாணவர்கள் அதிகார எண்களைக் குறிப்பிடத் தேவையில்லை)**



## திருக்குறள் திறன் போட்டி ௨௦௨௨ – திணைக்களமட்டப் போட்டி நடைமுறைகள்

**அதிபாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களைக்** கூற வேண்டும்.

---

**பாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும்** கூறவேண்டும்.
**(திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)**

---

**ஏனைய பிரிவுகள் (கீழ்ப்பிரிவு, நடுவண் பிரிவுகள், மேற்பிரிவுகள், உயர் பிரிவு, அதிஉயர் பிரிவு) :**

திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **குறள்களில் உள்ள முதற் சொல் தவிர்ந்த வேறு ஏதாவது ஒரு சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும். இதன்போது போட்டியாளரின்

- **மனனம்**
- **ஒலிப்பு**
- **பலுக்கல்**
- **உணர்வு**
- **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

**திணைக்களமட்டப் போட்டியின்போது பார்வையாளர்கள் உள்நுழைய இசைவளிக்கப்படமாட்டார்கள்.**

**(அதிபாலர் பிரிவு, பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு மாணவர்கள் அதிகார எண்களைக் குறிப்பிடத் தேவையில்லை.)**



# திருக்குறள் திறன் போட்டி 2022 – இறுதிப் போட்டி நடைமுறைகள்

**அதிபாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களைக்** கூற வேண்டும்.

---

**பாலர் பிரிவு :** திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்படும் **இரண்டு குறள்களுடன் மேலதிகமாக ஐந்தாவது குறளையும் அதன் பொருளையும்** கூறவேண்டும்.
**(திருவுளச்சீட்டில் குறளின் முதற் சொல் மட்டும் எழுதப்பட்டிருக்கும்)**

---

**ஏனைய பிரிவுகள்** (கீழ்ப்பிரிவு, நடுவண் பிரிவுகள், மேற்பிரிவுகள், உயர் பிரிவு, அதிஉயர் பிரிவு) **:**

- திருவுளச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் **குறள்களில் உள்ள முதற் சொல் தவிர்ந்த வேறு ஏதேனும் ஒரு சொல்லைக் கொடுத்துக்** குறள்கள் கேட்கப்படும்.
- அதிகாரத்தைக் குறிப்பிட்டு அதிகார எண் கேட்கப்படும் (**கீழ்ப்பிரிவு நீங்கலாக**).
- குறிப்பிட்ட குறளுக்குரிய அதிகாரத்தைக் கூறுமாறு கேட்கப்படும்.
- குறள்களின் பொருள்களுக்குரிய விளக்கம் தொடர்பான வினாக்கள் வினவப்படும்.

இதன்போது போட்டியாளரின்

- **மனனம்**
- **ஒலிப்பு**
- **பலுக்கல்**
- **உணர்வு**
- **நிலை**

என்பனவற்றின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.

**(அதிபாலர் பிரிவு, பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு மாணவர்கள் அதிகார எண்களைக் குறிப்பிடத் தேவையில்லை.)**

# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

தி.போ-22-03

## திருக்குறள் திறன் போட்டி - 2020

### பள்ளிமட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர்களின் விளத்தங்கள்

(10-07-2022 இற்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும்)

**தமிழ்ச்சோலை :**

| பிரிவு | குடும்பப் பெயரும் பெயரும் | கோவை எண் | பிறந்தநாள் | பங்குபற்றிய மாணவர் தொகை |
|---|---|---|---|---|
| அதிபாலர் பிரிவு | | | 31-08-2016 இற்குப் பின் | |
| பாலர் பிரிவு | | | 01-09-2014 முதல் 31-08-2016 வரை | |
| கீழ்ப்பிரிவு | | | 01-09-2012 முதல் 31-08-2014 வரை | |
| நடுவண் பிரிவு-அ | | | 01-09-2010 முதல் 31-08-2012 வரை | |
| நடுவண் பிரிவு-ஆ | | | 01-09-2008 முதல் 31-08-2010 வரை | |
| மேற்பிரிவு-அ | | | 01-09-2006 முதல் 31-08-2008 வரை | |
| மேற்பிரிவு-ஆ | | | 01-09-2004 முதல் 31-08-2006 வரை | |
| உயர் பிரிவு | | | 01-09-2002 முதல் 31-08-2004 வரை | |
| அதி உயர் பிரிவு | | | 01-09-2002 இற்கு முன் | |

**நடுவர்களாகக் கடமையாற்றிய ஆசிரியர்கள்**

| | பெயர் | நாள் | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | ………………………………………… | ……………… | ……………………………… |
| 2. | ………………………………………… | ……………… | ……………………………… |
| 3. | ………………………………………… | ……………… | ……………………………… |
| 4. | ………………………………………… | ……………… | ……………………………… |
| 5. | ………………………………………… | ……………… | ……………………………… |

☐ மேற்படி தகவல்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் ஆகும் என உறுதியளிக்கிறேன்.
☐ எனது தமிழ்ச்சோலையில் இம்முறை திருக்குறள் போட்டி நடாத்தப்படவில்லை.

…………………………………… ……………………….. ………………………………

**நிர்வாகியின் பெயர்** **நாள்** **கையொப்பம்**

**தலைமைப் பணியகப் பாவனைக்கு மட்டும்**

பெற்றுக்கொண்டவர் பெயர் : …………………………………… நாள் : …………………… ஒப்பம் : ………………………………
குறிப்பு : ……………………………………………………………………………………………………………………

**நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்**

# தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் - பிரான்சு

## திருக்குறள் திறன் போட்டி - 2022

தி.போ-22-04

**தமிழ்ச்சோலை :**

திருக்குறள் திறன் போட்டி 2022 தொடர்பாக, **'போட்டி நடைமுறைகள்' (தி.போ-22-02)** எனும் ஆவணத்தின் பிரதியை நாம் பெற்றுக்கொண்டோம் என்றும் அவற்றை ஏற்றுநடப்போம் என்றும் உறுதியளிக்கின்றோம்.

| **அதிபாலர் பிரிவு** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **பாலர் பிரிவு** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **கீழ்ப்பிரிவு** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **நடுவண்பிரிவு - அ** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **நடுவண்பிரிவு - ஆ** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **மேற்பிரிவு - அ** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **மேற்பிரிவு - ஆ** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **உயர் பிரிவு** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

| **அதிஉயர் பிரிவு** |
|---|
| போட்டியாளர் பெயரும் ஒப்பமும் : |
| பெற்றோர் பெயரும் ஒப்பமும் : |

**நிர்வாகி பெயர் :** ..........................................................................................................................................

**நாள் :** ................................. **ஒப்பம் :** ..........................................................................................................

**அதிகாரம் - கடவுள் வாழ்த்து**

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

**அதிகாரம் - செய்ந்நன்றி அறிதல்**

2. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

**அதிகாரம் - கல்வி**

3. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

**அதிகாரம் - கேள்வி**

4. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை



**அதிகாரம் - அடக்கமுடைமை**

1. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
   நாவினால் சுட்ட வடு

**அதிகாரம் - வாய்மை**

2. தன்னெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
   தன்னெஞ்சே தன்னைச் சுடும்

**அதிகாரம் - வெகுளாமை**

3. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
   ஏமப் புணையைச் சுடும்

**அதிகாரம் - இன்னா செய்யாமை**

4. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
   நன்னயம் செய்து விடல்

**அதிகாரம் - கல்வி**

5. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
   மாடல்ல மற்றை யவை

**பொருள்** : ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே! மற்றப் பொருட்செல்வங்கள் எல்லாம் அழியக்கூடியவை. ஆகையால் சிறந்தவை அல்ல.

**அதிகாரம் - இனியவை கூறல்**

1. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
   அணியல்ல மற்றுப் பிற

**பொருள்** : எவரிடத்திலும் பணிவுடையவனாகவும் இன்சொல் கூறுபவனாகவும் இருப்பதே ஒருவனுக்கு அணியாம். மற்றப் பொன்னும் மணியும் அணிகள் அல்ல.

**அதிகாரம் - கள்ளாமை**

2. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
   ஆவது போலக் கெடும்

**பொருள்** : களவினால் உண்டான செல்வம், அளவு கடந்து வளர்வது போலத் தோன்றி அழிந்துவிடும்.

**அதிகாரம் - கொல்லாமை**

3. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
   பின்சாரப் பொய்யாமை நன்று

**பொருள்** : முதற்படியாக நல்லறமாவது கொல்லாமையே. அதற்கு அடுத்தபடியாக நல்லது வாய்மையாகும்.

**அதிகாரம் - நட்பு**

4. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
   இடுக்கண் களைவதாம் நட்பு

**பொருள்** : ஆடை அவிழ்ந்தவனுடைய கை உடனே மானக்கேட்டை நீக்குவது போல, நண்பனுக்குத் துன்பம் வந்தபோது, அப்பொழுதே சென்று உதவி அத்துன்பத்தை நீக்குவதே உண்மையான நட்பாகும்.

**அதிகாரம் - நட்பு ஆராய்தல்**

5. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
   வீடில்லை நட்பாள் பவர்க்கு

**பொருள்** : ஒருவனோடு நட்புக் கொண்ட பின்பு, அவரை விட்டு விலகுதல் இயலாது. ஆகையால், ஆராயாமல் நட்புக் கொள்வதுபோலக் கேடு தருவது வேறொன்றும் இல்லை.

**அதிகாரம் 12 நடுவு நிலைமை**

1. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

**பொருள் :** நடுவு நிலைமை உடையவனது செல்வம் அழியாமல் நிலைத்து நின்று, அவன் வழி வருவோர்க்கும் பாதுகாப்பாக அமையும்.

---

**அதிகாரம் 17 அழுக்காறாமை**

2. அழுக்காறு எனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

**பொருள் :** பொறாமை என்று சொல்லப்படும் ஒப்பற்ற பாவி இம்மையில் செல்வத்தைக் கெடுத்து, மறுமையில் நிரயத்தில் (நரகத்தில்) புகுத்திவிடுவான்.

---

**அதிகாரம் 28 கூடா ஒழுக்கம்**

3. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்

**பொருள் :** மனத்தில் பற்றுகளைத் துறக்காமல், துறந்தவர்போல் நடித்துப் பிறரை ஏமாற்றி வாழும் பொய்த் துறவிகளைப் போல் கொடியவர் வேறு எவரும் இல்லை.

---

**அதிகாரம் 41 கல்லாமை**

4. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்

**பொருள் :** விளங்கிய நூல்களைக் கற்றவரோடு கூடியுள்ள மற்றக் கல்லாதவர், மக்களோடு கூடியுள்ள விலங்குகள் போன்றவர்.

---

**அதிகாரம் 42 கேள்வி**

5. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது

**பொருள் :** நுட்பமான கேள்வியறிவு இல்லாதவர், பணிவான சொற்களை உடையவராதல் இயலாது.

---

**அதிகாரம் 43 அறிவுடைமை**

6. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

**பொருள் :** எக்கருத்தையும் எவரெவர் சொல்லக் கேட்டாலும், அக்கருத்தின் உண்மையான பொருளைக் காணவல்லதே அறிவுடைமையாகும்.

**அதிகாரம் 12 நடுவு நிலைமை**

1. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
   உட்கோட்டம் இன்மை பெறின்

**பொருள் :** நடுவு நிலைமையாவது ஆராய்ந்து கூறும் தீர்ப்பின்கண் சொல்லில் குற்றம் இல்லாதது. அவ்வாறு நிகழ்வது மனத்தின்கண் குற்றம் இன்மையை உறுதியாகப் பெற்ற பொழுதேயாம்.

**அதிகாரம் 17 அழுக்காறாமை**

2. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
   ஏதம் படுபாக்கு அறிந்து

**பொருள் :** அறிவுடையோர் பொறாமை காரணமாக அறமல்லாதவற்றைச் செய்யார். அத்தீயநெறியால் தமக்குக் கேடு வருவதை அறிந்து.

**அதிகாரம் 28 கூடா ஒழுக்கம்**

3. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
   ஐந்தும் அகத்தே நகும்

**பொருள் :** வஞ்சமனம் உடையவனின் பொய்யொழுக்கத்தை, அவன் உடம்பாய்க் கலந்துள்ள ஐம்பூதங்களும் கண்டு தம்முள்ளே எள்ளிச் சிரிக்கும்.

**அதிகாரம் 41 கல்லாமை**

4. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
   கற்றார் அனைத்திலர் பாடு

**பொருள் :** கல்லாதவர் உயர் குடியிற் பிறந்தவராயினும், தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கற்றவரைப் போல அத்துணைப் பெருமையுடையவர் அல்லர்.

**அதிகாரம் 42 கேள்வி**

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
   ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்

**பொருள் :** ஒழுக்கமுடைய பெரியோரின் வாய்ச் சொற்கள், வழுக்கும் சேற்று நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்றுகோல் உதவுவது போலத் துன்பக் காலத்தில் உதவும்.

**அதிகாரம் 43 அறிவுடைமை**

6. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
   அதிர வருவதோர் நோய்

**பொருள் :** எதிர்காலத்தில் வரக்கூடியதை முன்னரே அறிந்து தம்மைக் காக்க வல்ல அறிவுடையவர்க்கு, அவர் அஞ்சி நடுங்குமாறு வரக்கூடிய துன்பம் ஒன்றுமில்லை.

**அதிகாரம் - 04** **அறன் வலியுறுத்தல்**

1. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு

**பொருள் :** அறம் சிறப்பையும் தரும்; செல்வத்தையும் தரும். ஆகையால், மக்களுக்கு அறத்தைவிடச் சிறந்த செல்வம் யாது?

**அதிகாரம் - 16** **பொறை உடைமை**

2. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை

**பொருள் :** ஒருவனுக்கு வறுமையுள் வறுமையாவது விருந்தினரைப் பேணாது விடுதல். அதுபோல் வலிமையுள் வலிமையாவது அறிவிலார் செய்த தீங்கினைப் பொறுத்தலாகும்.

**அதிகாரம் - 23** **ஈகை**

3. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்

**பொருள் :** தவவலிமை உடையவரது வலிமை எல்லாம், தம்மை வருத்தும் பசியைப் பொறுத்துக் கொள்வதே. அவ்வலிமையும் பசியை ஈகையால் ஒழிப்பவரது வலிமைக்குப் பிற்பட்டதே.

**அதிகாரம் - 38** **ஊழ்**

4. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு

**பொருள் :** உலகத்தில் ஊழினால் உண்டாகிய இயற்கை இருவகையானது. செல்வராதலும் வேறு; தெள்ளிய அறிஞராதலும் வேறு.

**அதிகாரம் - 45** **பெரியாரைத் துணைக் கோடல்**

5. தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்

**பொருள் :** தக்க பெரியாரைச் சுற்றமாகக் கொண்டு அவர் வழியில் நடக்க வல்லவனுக்கு, பகைவர் செய்யக் கூடிய தீங்கு ஒன்றுமில்லை.

**அதிகாரம் - 48** **வலி அறிதல்**

6. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்

**பொருள் :** தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கேற்ப வாழாதவனின் வாழ்க்கை, பல வளங்களும் உள்ளது போல் தோன்றி, உண்மையில் இல்லாதவனாய்ப் பின் அப்பொய்த் தோற்றமும் இல்லாது அழியும்.

**அதிகாரம் - 60** **ஊக்கம் உடைமை**

7. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்

**பொருள் :** ஒருவனுக்கு ஊக்கம் உடைமையே நிலையான உடைமை ஆகும். மற்றப் பொருளுடைமை நிலையில்லாமல் நீங்கிவிடும்.

**அதிகாரம் - 04** **அறன் வலியுறுத்தல்**

1. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

**பொருள் :** பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் விலக்கி நடத்தலே அறமாகும்.

---

**அதிகாரம் - 16** **பொறை உடைமை**

2. திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று

**பொருள் :** செய்யத் தகாதவற்றைப் பிறர் செய்தபோதிலும் அதனால், அவர்க்கு வரும் துன்பத்திற்காக மனம் நொந்து, அவர்களுக்கு அறம் அல்லாதவற்றைச் செய்யாதிருத்தல் நல்லது.

---

**அதிகாரம் - 23** **ஈகை**

3. சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை

**பொருள் :** ஒருவனுக்குச் சாவதைவிடத் துன்பம் வேறொன்றும் இல்லை. அச்சாவும் வறியவர்க்கு ஒன்று கொடுக்க இயலாத நிலையில் இனியதே ஆகும்.

---

**அதிகாரம் - 38** **ஊழ்**

4. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

**பொருள் :** ஊழ்த்தெய்வம் அவரவர்க்கு இன்பதுன்பம் வகுத்த வகைப்படி அல்லாமல் கோடிக்கணக்கில் பொருளை வருந்திச் சேர்த்தவர்க்கும் அப்பொருளால் இன்பம் நுகர்தல் இயலாது.

---

**அதிகாரம் - 45** **பெரியாரைத் துணைக் கோடல்**

5. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை

**பொருள் :** தம்மைவிட அறிவு முதலியவற்றில் பெரியவரைத் தமக்குத் துணைவராகக் கொண்டு, அவர் வழியில் நடத்தல், அவர்க்குரிய வலிமை எல்லாவற்றிலும் சிறந்தது.

---

**அதிகாரம் - 48** **வலி அறிதல்**

6. உளவரைத் தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்

**பொருள் :** தனக்குள்ள பொருள் அளவைச் சீர்தூக்கிப் பாராமல் மேற்கொள்ளும் ஒப்புரவினால், ஒருவனது செல்வத்தின் அளவு விரைந்து கெடும்.

---

**அதிகாரம் - 60** **ஊக்கம் உடைமை**

7. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு

**பொருள் :** ஊக்கம் இல்லாதவர் இவ்வுலகில் நாம் வள்ளல் தன்மை உடையோம் என்று மகிழ்வோடு கருதும் பெருமிதம் பெறமாட்டார்.

**அதிகாரம் - 39** **இறைமாட்சி**

1. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
   கவிகைக்கீழ்த் தங்கும் உலகு

**பொருள் :** செவிக்கு இனிக்காத இடிப்புரைகளைப் பொறுத்துக் கொள்ளும் பண்புடைய அரசனது குடைநிழலில் உலகம் தங்கும்.

---

**அதிகாரம் - 44** **குற்றம் கடிதல்**

2. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
   நன்றி பயவா வினை

**பொருள் :** அறிவு ஆற்றல்களிலும் இடம் பொருள் ஏவல்களிலும் தான் மிக உயர்ந்த போதும், தன்னை மெச்சிச் செருக்குக் கொள்ளாது இருக்க வேண்டும்.

---

**அதிகாரம் - 47** **தெரிந்து செயல்வகை**

3. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
   போற்றினும் பொத்துப் படும்

**பொருள் :** தக்க வழியில் செய்யப்படாத முயற்சி, பின்பு யாரும் துணையாக நின்று காப்பினும் கெட்டுப் போகும்.

---

**அதிகாரம் - 51** **தெரிந்து தெளிதல்**

4. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
   தீரா இடும்பை தரும்

**பொருள் :** தன்னோடு தொடர்பற்ற ஒருவனை ஒருவழியாலும் ஆராயாமல் தேர்ந்தெடுத்தவருக்கு, அத்தேர்வு அவன் வழியினர்க்கும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

---

**அதிகாரம் - 56** **கொடுங்கோன்மை**

5. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
   நாள்தொறும் நாடு கெடும்

**பொருள் :** தன் நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து, அதற்கேற்ப முறை செய்யாத அரசன், நாள்தோறும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நாட்டை இழப்பான்.

---

தொடர்ச்சி...

**அதிகாரம் - 71** **குறிப்பு அறிதல்**

1. ஐயம் படாஅது அகத்தது உணர்வானைத்
   தெய்வத்தோடு ஒப்பக் கொளல்

**பொருள் :** ஒருவனது மனத்தில் உள்ளதை ஐயப்படாது அறியவல்லவனை மதிநுட்பத்தால் தெய்வம் போன்றவன் எனக் கருதி, அதற்கேற்ப மதித்துப் போற்ற வேண்டும்.

**அதிகாரம் - 79** **நட்பு**

2. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
   நட்பாம் கிழமை தரும்

**பொருள் :** ஒருவரோடு ஒருவர் நட்புக் கொள்வதற்கு ஓரிடத்தில் கூடுவதும், பலமுறை கண்டுபேசி உறவாடுவதும் வேண்டியதில்லை. இருவருக்கும் ஒத்த மனப்பான்மையே நண்பராவதற்குரிய உரிமையைத் தரும்.

**அதிகாரம் - 93** **கள்ளுண்ணாமை**

3. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
   கள்காதல் கொண்டொழுகு வார்

**பொருள் :** கள்ளின் மேல் பெருவிருப்பங் கொண்டு நடப்பவர், எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார். அதுமட்டுமன்றித் தாம் பெற்றிருந்த நற்பெயரையும் இழப்பர்.



**அதிகாரம் - 28** **கூடா ஒழுக்கம்**

**1. புறம்குன்றி கண்டனையர் ஏனும் அகம்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து**

**பொருள் :** வெளிக்கோலத்தில் குன்றிமணியின் பின்புறம் போல செம்மையானவராகக் காணப்பட்டாராயினும், உள்ளத்தில் குன்றிமணியின் மூக்குப்போல இருண்டிருப்பவரை உடையது இவ்வுலகம்.

---

**அதிகாரம் - 50** **இடன் அறிதல்**

2. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கி அதனைப் பிற

**பொருள் :** முதலை தான் வாழுமிடமான ஆழமுள்ள நீர்நிலையில் யானை உட்பட பிறவிலங்குகளையும் வென்றுவிடும். ஆனால், நீரைவிட்டு நீங்கினால் வலிமை குறைந்த பிற உயிரிகளும் அதனை வென்றுவிடும்.

---

**அதிகாரம் - 65** **சொல்வன்மை**

3. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

**பொருள் :** சொல்ல வேண்டிய செய்திகளை ஒழுங்காக வரிசைப்படுத்தி இனிதாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், உலகம் விரைந்து அவர் ஏவல் கேட்டு நடக்கும்.

---

**அதிகாரம் - 69** **தூது**

4. தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது

**பொருள் :** வேற்றரசரிடம் பல செய்திகளைத் தொகுத்துச் சொல்லியும் வெறுப்பான செய்திகளைச் சொல்லும் போது, கடுஞ்சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனம் மகிழச் சொல்லியும் தன் அரசனுக்கு நன்மை செய்பவனே தூதனாவான்.

---

**அதிகாரம் - 73** **அவை அஞ்சாமை**

5. பல்லவை கற்றும் பயம்இலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்

**பொருள் :** நல்லறிஞரின் அவையில் நல்ல கருத்துகளை அவர்க்கு விளங்குமாறு எடுத்துச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர், பல நூல்களைக் கற்றும் உலகுக்குப் பயன்படாதவரேயாவர்.

---

தொடர்ச்சி....

அதிஉயர்பிரிவு

**அதிகாரம் - 82** **தீநட்பு**

6. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு

**பொருள் :** இல்லத்தில் தனியே இருக்கும் போது அன்பர் போல் நெருங்கிப் பழகி, அவையின் கண் பகைவர் போலப் பழி கூறுபவர் நட்பு சிறிதும் தம்மை அணுகாதபடி காத்துக்கொள்ள வேண்டும்.

**அதிகாரம் - 96** **குடிமை**

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து

**பொருள் :** நல்ல குடியில் பிறந்தவரிடத்தில் உள்ள குற்றம், வானத்தின்கண் நிலாவிலுள்ள களங்கம் போல் எல்லார்க்கும் தெரியுமாறு விளங்கித் தோன்றும்.

**அதிகாரம் - 97** **மானம்**

8. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்

**பொருள் :** குடிப்பிறப்பால் மலைபோல் உயர்ந்த நிலையில் உள்ளவரும் தாம் தாழ்வதற்கு ஏதுவான இழி செயல்களை ஒரு குன்றிமணியளவே செய்வாராயினும் தம் நிலையிலிருந்து தாழ்வர்.

**அதிகாரம் - 107** **இரவு அச்சம்**

9. இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல்

**பொருள் :** வறுமைத் துன்பத்தை உழைப்பால் நீக்குவோம் என்று கருதாது, இரப்பால் நீக்குவோம் என்ற கருத்துப்போல் கொடுமையானது இல்லை.

**அதிகாரம் - 108** **கயமை**

10. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்

**பொருள் :** பிறர் உடுப்பதையும் உண்பதையும் கீழ்மகன் கண்டால் அவற்றைப் பொறுக்கமாட்டாமல். வேண்டுமென்றே ஒரு குற்றத்தைப் படைத்துக் கூற வல்லவனாம்.



**நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்**

நம் வாழ்வும் வளமும் தமிழ்மொழி என்போம்

திருக்குறள் திறன் போட்டி – 2022